# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

## மானியக் கோரிக்கை எண். 9


**எஸ்.எஸ். சிவசங்கர்**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 4 |
| 3. | கல்வி | 13 |
| 4. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 15 |
| 5. | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 21 |
| 6. | இலவசக் கல்வி உதவித் தொகை | 28 |
| 7. | பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டம். | 36 |
| 8. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 37 |
| 9. | இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 38 |
| 10. | விடுதிகள் | 40 |
| 11. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 49 |

| | | |
|---|---|---|
| 12. | மாநில அளவில் சிறந்த மூன்று விடுதிகளுக்கும், பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல் | 51 |
| 13. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 52 |
| 14. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 53 |
| 15. | சீருடைகள் வழங்குதல் | 54 |
| 16. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 56 |
| 17. | சீர்மரபினர் நல வாரியம் | 59 |
| 18. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 64 |
| 19. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் | 70 |
| 20. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 72 |
| 21. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 73 |
| 22. | தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவர சேகரிப்பு ஆணையம் | 75 |
| 23. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 76 |
| 24. | இணைப்பு | 86 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2021–2022

### முன்னுரை

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்துத் தந்த சமூக நீதிப்பாதையில் இவ்வரசு தொய்வின்றி நடைபோடும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு இவ்வரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இம்மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரின்

ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நல இயக்ககங்கள் தவிர, சிறுபான்மையினர் நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு தனி இயக்குநரகம் ஒன்று 2007 ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டது.

சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு கல்வியே சிறந்த சாதனமாகும். அய்யன் திருவள்ளுவர் கூற்றுப்படி **"கல்வியே ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வமாகும்".** ஒருவரது அறிவுத்திறன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. மேற்குறிப்பிட்ட மறுக்கமுடியாத உண்மையினை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு இத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும்பங்கினை கல்விக்கு அளித்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் கல்வி வளர்ச்சியில் கவனத்தைச்

செலுத்தி வருகிறது. இப்பிரிவு மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சுயதொழில் துவங்க கடன் உதவி வழங்கப்படுகிறது. மேலும் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியன இலவசமாக வழங்கப்படுகின்றன. சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் ஆகிய நலவாரியங்கள் மூலம் இவ்வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்துவதில் தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இடஒதுக்கீட்டுக் கொள்கை, உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெறவும், அரசுத் துறைகளில் வேலை பெறவும் ஏதுவாக சிறந்ததொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடையும் வகையில் இத்துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 2. இடஒதுக்கீடு

1921 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வரும் இடஒதுக்கீட்டு கொள்கை, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களாலும் எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு பயனுள்ள மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இந்திய அரசமைப்பு சட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன் "வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை" என்று அழைக்கப்பட்ட பல்வேறு பிரிவினர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணை செல்லாது என உச்சநீதிமன்றத்தால் 1951 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் வழி நடத்திய

பெருந்திரளான எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்பு சட்டத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட்டு முதல் அரசமைப்பு சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தது. பல நூற்றாண்டுகளாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்டு வந்த பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்கள் கல்வி, சமூக, மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்கான சமூக நீதிப் போராட்டத்தில் இது ஒரு வரலாற்று சாதனை எனப் போற்றப்படுகிறது.

மாநிலத்தின் மக்கள் தொகையில் 88 விழுக்காட்டிற்கும் மேல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளனர். இடஒதுக்கீட்டின் அளவு பல்வேறு காலங்களில் உயர்த்தப்பட்டது. தற்போது உள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீடு மாநிலத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தனி இடஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்திடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்களைப் பொருத்தமட்டில் இந்த 69 விழுக்காடு இடஒதுக்கீடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் மட்டுமே கடைபிடிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையை மாற்றி, சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் நீங்கலாக, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் 31.05.2006 அன்று

சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இடஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு

| வ. எண். | பிரிவு | இடஒதுக்கீடு விழுக்காடு |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர்<br>*பகுதி I வன்னியகுல சத்திரிய – 10.5%<br>பகுதி II மி.பி.வ / சீர்மரபினர் – 7%<br>பகுதி III மி.பி.வ. – 2.5% | 20* |
| 4. | ஆதிதிராவிடர் | 18 |
| 5. | பழங்குடியினர் | 1 |
| | மொத்தம் | 69 |

1992 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் இந்திராசஹானி (மண்டல் குழு) வழக்கில்

இடஒதுக்கீடு 50 விழுக்காடிற்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுவரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு சட்டம் 45/1994 நிறைவேற்றப்பட்டது. பின்னர் அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 31–பி - யின் பாதுகாப்பு பெறும் பொருட்டு, தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப்பணிகளில் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திடவும், பேணிகாத்திடவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு வழங்கும் போது "வளமான பிரிவினரை" (Creamy layer) நீக்கம் செய்யும் கொள்கையை இவ்வரசு எப்போதும் எதிர்த்து வருகிறது. தந்தை பெரியாரும், பேரறிஞர்

அண்ணாவும், பண்டித நேருவும், அண்ணல் அம்பேத்காரும் வலியுறுத்தி வந்தவாறு, பொருளாதார நிலையை அளவுகோலாகக் (Creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டும் கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒன்றிய அரசின் பணிகளிலும், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பெற வழிவகுக்கும் வகையில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை ஒன்றிய அரசு 2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததில் அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர்

கலைஞர் அவர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளார்கள்.

ஒன்றிய அரசு உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீடு, முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசு பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும்

பழங்குடியினர் மக்கள் தொகைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் பின்பற்றப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவு வேறுபடுகிறது. எனவே மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு விழுக்காட்டை நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதற்கேற்ப இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யுமாறு ஒன்றிய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

அரசுப் பணிகளில் நியமனங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. அரசு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக வரிச்சலுகை போன்று பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்தப்

பயன்கள் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் சென்றடையும் விதத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு அவசியம் என கருதப்படுகிறது. இந்திய அரசமைப்பு சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வழங்க இயலும். எனவே, இதற்குத் தேவையான அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வர இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

அனைத்து சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான முழுமையான சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து நடத்திட தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும்

உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டினை இந்தக் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

## 3. கல்வி

ஒரு வகுப்பின் சமூகப் பின்னணி மற்றும் அதன் வெளித்தோற்றம் ஆகியவற்றைக் கல்வியே தெளிவாகக் காட்டும் என்பதால் கல்வி வளர்ச்சியைக் கொண்டே எந்தவொரு சமுதாயத்தின் முன்னேற்றமும் தீர்மானிக்கப்படுகிறது. ஊக்கத்தொகை அளிப்பதன் வாயிலாக பெண்களின், குறிப்பாக ஊரகப் பகுதி பெண்களின் கல்விக்கு இணக்கமானதொரு சுற்றுச் சூழலை

ஏற்படுத்துவதன் மூலம் ஆண், பெண் இருபாலரிடையே சமத்துவத்தை உருவாக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு அரசு இலவச உண்டி மற்றும் உறைவிடம் அளிப்பதுடன் இம்மாணவ, மாணிவியர் தடையின்றி கல்வியினை தொடரும் பொருட்டு பல்வேறு வகையான கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அரசு/அரசு நிதி உதவி பெறும்/ பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் ஆகியன அரசால் வழங்கப்படுகின்றன. பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக அவ்வகுப்பினர் பெருமளவில் வசிக்கும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இத்துறை

295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது.


## 4. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

கல்வி வளர்ச்சியே ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான திறவுகோல் ஆகும். பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 27,060 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

| அரசு கள்ளர் பள்ளி மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | பள்ளிகளின் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப் பள்ளி மழலையர் (LKG) வகுப்பு உட்பட | 213 | 5334 | 5150 | 10484 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 793 | 788 | 1581 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 22 | 1377 | 1143 | 2520 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | 38 | 6694 | 5781 | 12475 |
| | மொத்தம் | 295 | 14198 | 12862 | 27060 |

## கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை



கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவ, மாணவியருக்கு அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, மடிக்கணினி, சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், உலக வரைபடப் புத்தகம் மற்றும் காலணி ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (smart class rooms) அமைத்து தரப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் கிராமப்புறத்தைச் சார்ந்த மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவியருக்கு ஊக்கத் தொகையாக ஆண்டிற்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500 வீதமும், 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது.

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகளும் (LKG) இதே போன்று இம்மூன்று மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு தலா 5 மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 15 மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் ஆங்கில வழி கல்வி வகுப்புகளும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆங்கில வழி வகுப்புகளில் 1,318 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

2020–2021 ஆம் ஆண்டு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.12,169.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.12,331.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டில் இதனுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 186 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டிற்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள்

வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டில் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.13.45 இலட்சம் பரிசு தொகைகளுக்காக செலவிடப்பட்டது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்காக ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர் தம் வாழ்வில் முன்னேற்றம் பெற கல்வி இன்றியமையாததாகும். எனவே இம்மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை தொடர ஏதுவாக பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும்.

## 5.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ,

மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 10 ஆம் வகுப்பு தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)

இத்திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 1,16,296 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.133.68 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| **வகுப்பு** | **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| பிவ | 71,024 | 81.68 |
| மிபிவ/சீம | 45,272 | 52.00 |
| மொத்தம் | 1,16,296 | 133.68 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.103 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.86.97 இலட்சமும் என மொத்தம் ரூ.189.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு

அவர்களது தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. (அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டணங்களை மாணவ, மாணவியர் செலுத்த வேண்டியதில்லை)

### 5.2.1 கல்லூரி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

வகுப்புகளைச் சார்ந்த ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அதே

விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், உண்டி, உறையுள் கட்டணமாக கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு இக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 3,14,293 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.6,929.06 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 2,00,984 | 4432.18 |
| மிபிவ/சீம | 1,13,309 | 2496.88 |
| மொத்தம் | 3,14,293 | 6929.06 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.5,450 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,100 இலட்சமும் என மொத்தம் ரூ.8,550 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இலவசக் கல்வி உதவித்தொகை

### 6.1 பட்டப்படிப்பு

இலவச கல்வி உதவித்தொகை (பட்டப்படிப்பு) திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகின்றது (அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது). புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு இக்கல்வி உதவித்தொகையுடன், மாதம் ரூ.175 வீதம்

ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உண்டி உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 1,94,268 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.3,730.66 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில் ) |
|---|---|---|
| பிவ | 1,05,556 | 2090.43 |
| மிபிவ/சீம | 88,712 | 1640.23 |
| மொத்தம் | 1,94,268 | 3730.66 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.2,300 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1,800 இலட்சமும் என மொத்தம் ரூ.4,100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.2 பட்டயப்படிப்பு

இலவச கல்வி உதவித்தொகை (பட்டயப்படிப்பு) திட்டத்தின்கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது. புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக்கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய/பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி கல்வி

உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.225 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 2,848 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.113.91 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,573 | 64.34 |
| மிபிவ/சீம | 1,275 | 49.57 |
| மொத்தம் | 2,848 | 113.91 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.93.00 இலட்சம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

நலத்துறைக்கு ரூ.80.00 இலட்சம் என மொத்தம் ரூ.173.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.3 தொழிற்கல்விப் படிப்பு

இலவச கல்வி (தொழிற்கல்விப் படிப்பு) திட்டத்தின்கீழ், அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது. புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. மேலும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு

மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.350 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 1,16,148 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.5,362.70 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 71,682 | 3297.59 |
| மிபிவ/சீம | 44,466 | 2065.11 |
| மொத்தம் | 1,16,148 | 5362.70 |

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.4,600 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.3,000 இலட்சமும் என மொத்தம் ரூ.7,600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.eschloarships.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு முறையில் (IFHRMS) மாணவ, மாணவியரின்

வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

**7. பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டம்.**

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 213 மாணவ, மாணவியர்

பயனடையும் வகையில் ரூ.126.90 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

பெண் கல்வியை கிராமப்புறப் பெண்களிடையே ஊக்குவிக்கும் பொருட்டும், ஆரம்பக் கல்வியின் இடையே பெண் குழந்தைகள் படிப்பைக் கைவிடுவதைக் குறைக்கும் பொருட்டும் கிராமப்புறப் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவி ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500 வீதமும் 6 ஆம் வகுப்பு பயிலும் மேற்குறிப்பிட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவி ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதமும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 1999 – 2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000 ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 2,64,898 மாணவியர் பயனடையும் வகையில் ரூ.1,655.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1,675 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வருமான உச்ச வரம்பின்றி மிதிவண்டிகள்

இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியர் இலவச மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 3,77,286 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ.14,879.34 இலட்சம் செலவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வகுப்பு | மாணவ, மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| பிவ | 1,98,206 | 7818.73 |
| மிபிவ/சீம | 1,79,080 | 7060.61 |
| மொத்தம் | 3,77,286 | 14879.34 |

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.7,885.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.6,787.49 இலட்சமும்


என மொத்தம் ரூ.14,672.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக இலவச உணவு மானியம், தங்கும் வசதியுடன் மொத்தம் 1,336 விடுதிகள் இயங்கி வருகின்றன. விடுதிகளின் விவரம் பின்வருமாறு:


| வ. எண் | துறை | விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1 | பிவ | கல்லூரி | 82 | 63 | 145 |
| | | பள்ளி | 381 | 208 | 589 |
| | | மொத்தம் | 463 | 271 | 734 |
| 2 | மிபிவ | கல்லூரி | 43 | 52 | 95 |
| | | பள்ளி | 238 | 113 | 351 |
| | | மொத்தம் | 281 | 165 | 446 |
| 3 | சீம | கல்லூரி | 11 | 8 | 19 |
| | | பள்ளி | 91 | 46 | 137 |
| | | மொத்தம் | 102 | 54 | 156 |
| கல்லூரி | | | 136 | 123 | 259 |
| பள்ளி | | | 710 | 367 | 1077 |
| **மொத்தம்** | | | **846** | **490** | **1336** |

## விடுதிகளின் எண்ணிக்கை




இவ்விடுதிகளில் 85,014 மாணவ, மாணவியர் தங்கிப் பயன்பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர தகுதி பெற்றவர்களாவர்.

## விடுதி மாணவ, மாணவியரின் எண்ணிக்கை




ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்டஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ, மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு

ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

2021 – 2022 ஆம் ஆண்டிற்கு, விடுதிகள், குறிப்பாக கல்லூரி விடுதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, அரசு ரூ.25 கோடி சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**10.1 உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,100 ஆகவும், ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தைப்பொங்கல், குடியரசு தினம், தமிழ் புத்தாண்டு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் விடுதி மாணவ/ மாணவிகளுக்கு சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80–ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.50 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75 ஆகவும் மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும்

பிற செலவினங்களுக்காக ரூ.19,492.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ.30,245.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.16,619.57 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.13,625.44 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பனிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

2. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு

இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

4. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

5. அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

6. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

7. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

8. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

10. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

11. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரகுட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி

விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

13. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

## 11. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

இத்துறையின் மூலம் நடத்தப்படும் அரசு விடுதிகள் தவிர பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் 39 தனியார் விடுதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களில், பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000க்கு மிகாத பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியருக்கு அவர்களின் உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 952 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் ரூ.16.50 இலட்சம் செலவிடப்பட்டது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.51.01 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.46.80 இலட்சமும் என மொத்தம் ரூ.97.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. மாநில அளவில் சிறந்த மூன்று விடுதிகளுக்கும், பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்

மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து அவ்விடுதிகளுக்கு கேடயம் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர்/ காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| 2. | காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 3. | சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 4. | தூய்மைப் பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக ரூ.2.74 இலட்சம் செலவிடப்பட்டது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மொத்தமுள்ள 1,336 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் 1,269 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 67 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 35 விடுதிகளுக்கு கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் பொதுப்பணித் துறை மூலம் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 32 விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020−2021 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.1,230.95 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2021−2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.1,426 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும் என மொத்தம் ரூ.1,626 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப்பணித்துறை மூலம் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டு தோறும் ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2020−2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.630 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 93 விடுதிகளின் பராமரிப்பு பணிகள்

மேற்கொள்ளப்பட்டன. இது தவிர 2020–2021 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு என ரூ.900 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 114 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2021–2022 ஆம் ஆண்டிற்கு விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.630 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. சீருடைகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இலவச இணை சீருடைகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.250 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.225.40 இலட்சமும் என மொத்தம் ரூ.475.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 16.1 இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ், ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சலவைத் தொழில் செய்பவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ.109 இலட்சம் மதிப்பீட்டில் 2,238 சலவைப் பெட்டிகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.109 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.2 இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

இத்திட்டத்தின்கீழ், ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2020–2021 ஆம் ஆண்டிற்கு 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.65 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.67.66 இலட்சமும் என

மொத்தம் ரூ.132.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.3 இலவச வீட்டு மனை வழங்குதல்

நலிவுற்ற மக்கள் தங்களுக்கான உறைவிடத்தை அமைத்து கொள்ளும் வகையில் இலவச வீட்டுமனைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தற்போது இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 548 பயனாளிகளுக்கு ரூ.344.43 இலட்சம் செலவில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டிற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.150.02 இலட்சமும் என மொத்தம் ரூ.350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்" 2007 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள்

மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்நலவாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 5. | | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 3,398 உறுப்பினர்களுக்கு ரூ.80.91 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த "வலையர்

அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்று தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்கும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 2008 ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை,

மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ.7,500 மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ.1,25,000 பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.1,065 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000முதல் 1,00,000 வரை |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 500 |
| | ஆ) | 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 1,000 |
| | இ) | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | உ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஊ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | எ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித் தொகை | 2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | 3,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |
| 9. | அ) | தனி நபர் தொழில் தொடங்க மானியம் | 7,500 |
| | ஆ) | குழுவாக தொழில் தொடங்க மானியம் | 10,000 தனி நபருக்கு (அல்லது) 1,25,000 குழுவிற்கு |

இதுவரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 13,932 உறுப்பினர்களுக்கு ரூ.781.35 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு 2009 ஆம் ஆண்டு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு, "தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும்

நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018" என்ற சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 04.02.2019 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப்பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்" ஒரு தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் உறுப்பினர் – செயலாளர் ஒருவரும், இரண்டு அரசு சார்பான உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும், 23 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இவ்வாரியத்தால் இதுவரை 97 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் 36 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட இந்த

36 அறக்கட்டளைகளின் சொத்துக்களின் பட்டியலை இச்சட்டப்பிரிவு 5-ன்படி தமிழ் நாடு அரசிதழில் வெளியிடுவதற்கு இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 20. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஆண்டு தோறும் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும்.

2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திராசஹானி வழக்கு என்று அறியப்படுகிற மண்டல் வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை சார்புடைய (quasi–judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல் வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமல் இருத்தல் குறித்தான முறையீடுகள்

ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்;

(iV) கிறித்துவர், இசுலாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை வழங்கும்;

(V) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து, உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்கும்.

(Vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் நீதியரசர் திரு எம். தணிகாசலம் (ஓய்வு) அவர்களின் தலைமையில் 6 உறுப்பினர்களுடன் 08.07.2020 அன்று 3 ஆண்டுகளுக்கு திருத்தியமைக்கப்பட்டது.

## 22. தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவர சேகரிப்பு ஆணையம்

தமிழ்நாட்டில் சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டது.

## 23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் 16.11.1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22.05.1982 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர் மற்றும் குழுக்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பல்வேறு கடனுதவி திட்டங்களை செயல்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.12.27 கோடி ஆகும். இந்நிறுவனம், தேசிய

பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

**23.1 கடன் திட்டங்கள்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தனி நபர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு

செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.

தாய்கோ வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையங்கள் (ஆவின்) ஆகிய நிறுவனங்கள் கடன் தொகைகளை வழங்குவதற்கும், வசூல் செய்வதற்கும் துணை முகவர்களாக செயல்படுகின்றன.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.3,00,000 ஆகும்.

### 23.1.1. பொது காலக் கடன் திட்டம்

பொது காலக்கடன் திட்டத்தின்கீழ், சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை

ஆண்டுக்கு 7 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.15 இலட்சம் வரை ஆண்டுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 91 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் 363 பயனாளிகளுக்கு ரூ.381.22 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1. 2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் முன்னேற்றத்தினை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில்

கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 92 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் 279 பயனாளிகளுக்கு ரூ.163.18 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 23.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

பெண்களுக்கான நுண்கடன் திட்டத்தின்கீழ், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர். உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், குழு ஒன்றிற்கு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் ஆண்டுக்கு 4 விழுக்காடு

வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் 13,391 பயனாளிகளுக்கு ரூ.8,668.94 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**23.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்**

ஆண்களுக்கான நுண் கடன் திட்டத்தின் கீழ், ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஒரு குழுவில் அதிகபட்சம் 20 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவர். உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையும், குழு ஒன்றிற்கு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் ஆண்டுக்கு

5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும். இக்கடன் திட்டத்தில் பயனாளிகள் கடன்களை திரும்ப செலுத்தும் விகிதம் 95 விழுக்காடாக உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 292 பயனாளிகளுக்கு ரூ.188.32 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது

2020-2021 ஆம் ஆண்டில் இக்கழகத்தால் மொத்தம் 14,325 பயனாளிகளுக்கு ரூ.9,401.66 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.126 கோடி அளவில் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ.120 கோடி மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்

கழகத்தின் பங்குத் தொகை ரூ.6 கோடி) கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 23.2 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ.1,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 5,117 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2,409.37 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியம் வழங்குவதற்காக ரூ.350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழ்நாட்டில் சமூக நீதியினை நிலைநாட்டுவதில் இவ்வரசு பெரும் அக்கறை கொண்டுள்ளது. இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் சமூக, கல்வி, பொருளாதார நிலையினை மேம்பாடு அடையச் செய்வதிலும், அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பேணி பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும், அரசு பணிகளில் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு கொள்கையை செவ்வனே செயல்படுத்தி இவ்வரசு

தமிழ்நாட்டை பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழச் செய்துள்ளது. இப்பிரிவைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

**எஸ்.எஸ். சிவசங்கர்**

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்.**

# இணைப்பு

## 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 633.18 | --- | 40.00 | 673.18 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 1992.27 | --- | ---- | 1992.27 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 50084.73 | 2926.02 | --- | 53010.75 |
| மிகப்பிற்படுத்தப்பட் – டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 51875.19 | 4657.85 | --- | 56533.04 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 94.47 | --- | --- | 94.47 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 64.93 | --- | --- | 64.93 |
| சிறுபான்மையினர் நலன் | 1891.49 | 1300.01 | --- | 3191.50 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 75.92 | --- | --- | 75.92 |
| **மொத்தம்** | **106712.18** | **8883.88** | **40.00** | **115636.06** |




துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்

09.07.2021 அன்று  ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



கொரோனா பெருந்தொற்று காரணமாக செயல்படாமல் இருந்த விடுதிகள் மீண்டும் 01.09.2021 அன்று செயல்படும் நிலையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் 25.08.2021 அன்று திருவல்லிக்கேணி மிகப்பிற்படுத்தப்பட்டோர் அரசு கல்லூரி மாணவியர் விடுதியில் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்தார்கள்.




மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பயனாளிகளுக்கு இலவச சலவை பெட்டிகள் வழங்கப்படுகின்றன.



மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பயனாளிகளுக்கு

இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.



அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப்பள்ளி அ.பூச்சிப்பட்டி, மதுரை.



அரசு பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதி, தேனி